**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 61/2019

21.11.2025

## D.W.1- ஞானம்மாள்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ஆசிரியையாக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனது கணவரும் அரசு ஊழியராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். தாவா சொத்து 04.05.2011ம் தேதி கிரையம் பெற்ற சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை கீரிப்பட்டியை சேர்ந்த தங்கமாயனுக்கு ரூ.3,50,000த்திற்கு கிரையம் பேசி ரூ.3 லட்சம் முன்பணம் பெற்றுக்கொண்டு 27.07.2011ம் தேதிய கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. வட்டிக்கு தான் வாங்கினேன். என்னிடம் காண்பிக்கும் வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மீத கிரையத்தொகை ரூ.50,000த்தை ஒரு வருட தவணை காலத்திற்குள் செலுத்தி கிரையம் பதிந்து கொள்ளவேண்டியது என கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த தேதிக்கு பின்னர் அதே ஊரை சேர்ந்த துரைப்பாண்டி என்பவருக்கு பொது அதிகார முகவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 பவர் பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி பவர் பத்திரத்தில் நான் பெண்பால் என்பதால் அலுவலகத்திற்கு வர முடியாது என்பதாலும் ஒத்தி, கிரையம், ஈடு, கிரைய ஒப்பந்தம் செய்து கொள்ள, அட்வான்ஸ் பேச, பிழை திருத்தங்கள் செய்ய, வழக்கு தாக்கல் செய்ய என அனைத்து அதிகாரங்கள் கொடுத்து போடப்பட்டது என்றால் சரிதான். நான் வட்டிக்கு பணம் பெற்றதாக சொல்கிறேன். வட்டியும், அசலும் எந்த தேதியில் கொடுத்தேன் என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் முன்னர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சொல்லாமல் கூடுதல் எதிர்வழக்குரையில் பின்யோசனை செய்து வாதியை ஏமாற்றுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. துரைப்பாண்டி என் வீட்டிற்கு சண்டை போட்டு பணத்தை வாங்கியது சம்மந்தமாக துரைப்பாண்டியின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் இல்லை, அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்பதால் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. துரைப்பாண்டி பொது அதிகாரத்தின் அடிப்படையில் வாதிக்கு பதிந்து கொடுத்த கிரைய ஒப்பந்தம் 25.11.2013ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். நான் துரைப்பாண்டிக்கு கொடுத்த பொது அதிகார பத்திரத்தை 27.12.2013ம் தேதி துரைப்பாண்டிக்கு முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல் நான் தன்னிச்சையாக ரத்து செய்தேன் என்றால் சரியல்ல. வாதி, எனக்கும், பவர் ஏஜென்ட் துரைப்பாண்டிக்கும் 10.01.2015ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்பதால் நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற தாவா சொத்தை 2011ல் தங்கம் என்பவரிடம் ரூ.1 லட்சத்திற்கு ரூபாய்க்கு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஒப்பந்தத்தில் 2013ல் ரூ.3,25,000 என கிரையம் பேசியது சொத்தை வாங்கும் நோக்குடன் தான் வட்டிக்காக கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு வருட கால இடைவெளியில் சொத்தின் மதிப்பு ரூ.2 லட்சம் உயர வாய்ப்புண்டு, அதற்கு மேல் உயர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்ற நான் துரைப்பாண்டிக்கு கொடுத்த பொது அதிகார முகவர் பத்திரத்தை சட்டத்திற்கு எதிராக ரத்து செய்து வாதிக்கு பணம் திரும்ப கொடுக்கப்பட்டது என பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. துரைப்பாண்டி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது பொது அதிகார முகவர் தாவா சொத்தை பொறுத்து வாதியுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்படி மீத தொகை ரூ.25,000த்தை பெற்றுக்கொண்டு வாதிக்கு கிரையம் பதிந்து கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.21 18:23:35 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.